*(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 782,831 இற்கான 12 கடன் மீதிகள் 3 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.*

*(ஆ) மருத்துவ பீட 4 ஊழியர்கள் பெற்றிருந்த கடனைத் தீர்க்காமல் சேவையில் இருந்து விலகியிருந்ததுடன் 2016, திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 288,399 இற்கான கடன் மீதியொன்று அவர்களிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. இந்தக் கடன்தொகை குறிப்பிட்ட ஆட்களுக்கு வழங்கப்பட்டு 5 வருடங்கள் முதல் 9 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அப்பணத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.*

*(இ) 2016, திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 30 கலாநிதிகளினால் உடன்படிக்கைகளை மீறியமை தொடர்பாக ரூபா 40,086,005 இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. இவற்றில் கலாநிதிகள் 08 பேர்களிடம் ரூபா 8,121,094 இற்கான மீதி 11 வருடங்கள் முதல் 38 வருடங்கள் வரையான காலவீச்சில் காணப்பட்டதுடன் பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.*

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மை :**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம் II ஆம் பகுதியின் 15 (V) ஆம் பிரிவு | ஏதேனும் உயர்கல்வி நிறுவனமொன்றினால் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளுக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமெனினும், அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பல்கலைக்கழகத்தின் 4 பீடங்களில் 53 பாடநெறிகள் நடத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்காக தாபன விதிக்கோவை | |
| (i) XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் உட்வருதல் மற்றும் வெளிச்செல்லல் ஆகிய நேரங்கள் பதிவு செய்ய வேண்டுமெனினும் 743 கல்விசார் உத்தியோகத்தர்களின் உள்வருதல் மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்தியிருக்காமல் சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 1,375,562,712 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) XXII ஆம் அத்தியாயத்தின் 18-3 ஆம் பிரிவுகள் | ஏதேனும் ஒரு நபரின் வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த போது அவருக்கு எதிராக நடத்தப்படும் ஒழுக்காற்று விசாரணை விடயங்கள் கூடிய அளவு தாமதமின்றி பூர்த்தி செய்ய வேண்டும். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் சேவையில் இருந்த ஆள் ஒருவர் 2005, திசெம்பர் 9 ஆந் திகதி முதல் அரைச் சம்பளத்துடனான வேலை இடைநிறுத்தப்பட்டிருந்ததுடன் 2017, யூன் 30 ஆந் திகதி வரை 11 வருடங்களும் 06 மாதங்களுக்குமாக அரைச் சம்பளமாக ரூபா 1,885,809 இற்கான தொகையொன்று செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும் குறிப்பிட்ட ஒழுக்காற்று விசாரணை விடயங்கள் முடிவாகியிருக்கவில்லை. |
| (இ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| நிதிப் பிரமாணம் 371 மற்றும் 2015, யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச்சுற்றிக்கை | (i) பெற்றுக்கொண்டுள்ள முற்பணத்தில் இருந்து குறிப்பிட்ட விடயத்தை விரைவாக பூர்த்தி செய்து முற்பணத்தை தீர்க்க வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது 28 சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 2,772,704 தொகைக்கான முற்பணத்தினைத் தீர்ப்பதற்கு 47 நாட்கள் முதல் 326 நாட்கள் வரையான காலம் நடத்திருந்தது. |

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| | (ii) ஒரு தடவை வழங்கப்படக்கூடிய உச்ச அளவு முற்பணம் ரூபா 100,000 தொகை எனினும் நிறுவனத்தினால் ரூபா 149,940 இல் இருந்து ரூபா 658,103 தொகை வரை வீச்சில் மீளாய்வாண்டின் போது 07 சந்தர்ப்பங்களில் முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) 2004, சனவரி 26 ஆந் திகதிய 2004/புச/01 இலக்கம் கொண்ட தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சேவைச் சபையின் சுற்றறிக்கை | வருடாந்த நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்தல் ஒன்று நடத்தப்பட வேண்டுமெனினும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 380,885,509 இற்கான நூலகப் புத்தகங்கள் மற்றும் பருவவெளியீடுகள் தொடர்பாக 2016 ஆம் ஆண்டிற்காக வருடாந்த புத்தகங்கள் மெய்மையாய்தல் நடத்தப்பட்டிருக்கவில்லை. |
| (உ) 2015, செத்தெம்பர் 18 ஆந் திகதிய 13/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை | போக்குவரத்து வசதிகளை உரித்துடைய பதவி ஒன்றில் இல்லாத சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவருக்காக (சிரேஷ்ட மாணவ ஆலோசகர்) 2015 ஆம் ஆண்டு முதல் வாகனம் ஒன்று மற்றும் மாதாந்தம் எரிபொருள் வழங்கப் பட்டிருந்தது. மீளாய்வாண்டின்போது வழங்கியிருந்த எரிபொருளின் பெறுமதி ரூபா 337,720 தொகையாகும். |

**2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் அடங்காத சிரேஷ்ட சட்ட ஆலோசகர் பதவிக்காக 2015, செத்தெம்பர் 9 ஆந் திகதி நடைபெற்ற 499 ஆவது நிருவாகக் குழுக்கூட்டத்தில் எடுத்திருந்த தீர்மானமொன்றின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின்போது நிருவாக நிதியத்தில் இருந்து ரூபா 1,050,000 தொகை செலுத்தியிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்:**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 176,157,091 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 326,038,151 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின்போது நிதி விளைவுகள் ரூபா 149,881,060 தொகையினால் வீழ்ச்சியடைந்திருந்தது. அரசாங்க மானியம் ரூபா 338,034,192 தொகையினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம் ரூபா 444,958,302 இனால் மற்றும் ஏனைய மேலதிகச் செலவுகள் ரூபா 343,767,748 இனால் அதிகரித்தல் மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை மிகை, தளம்பலுடன் வளர்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், அரசுக்கு செலுத்திய வரிகள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கு பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்த போது பல்கலைக்கழகத்தின் பங்களிப்பு 2012 ஆம் ஆண்டு முதல் இடையறாது வளர்ச்சியடைந்து 2016 ஆம் ஆண்டளவில் ரூபா 2,968,791,856 தொகையாகியிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு:**

**4.1 செயலாற்றுகை :**

பல்கலைக்கழகத்தினால் வழங்கியிருந்த தகவல்களின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் குறிக்கோளான கற்பித்தல் விடயங்களுக்காக நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல், கல்வி பாடநெறியின் தரம் சர்வதேச மட்டம் வரையும்

உயர்த்துதல், உயர்ந்த ஆய்வு மட்டமொன்றினை ஏற்படுத்துவதற்கான வசதிகளை விசாலமாக்குதல் பல்கலைக்கழகத்தின் சமூகம் சார் சுற்றுச் சூழல்களை உயர்த்துதல், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினரின் திறமைகளை வலுப்படுத்துதல், முகாமைத்துவ முறைமையினை உயர்த்துதல் மற்றும் சமூகம்சார் நலன்களுக்காக அறிவு மற்றும் அனுபவத்தை பயன்படுத்துதல்.

இக்குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 முதல் 2020 வரையான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் பிரதான செயலாற்றுகை தேர்வு முறையாக சுட்டிக்காட்டியிருந்த 06 தேர்வு முறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது கவனம் செலுத்தப்பட்டதுடன் அவ்விடயங்களாவன நிர்மாண வேலை ஒத்துழைப்புக்காக நிர்மாண வேலை பரப்பில் மற்றும் பல்கலைக்கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு உடன்படிக்கைகள் ஏற்படுத்துதல், பகிரங்க கருத்தரங்குகள் நடாத்துதல், கல்வி பதவியணியினரால் நூற்கள் வெளியிடுதல், பல்கலைக்கழக கல்வி பதவியணியினர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளல், முதுமாணிப்பட்ட மாணவர்களின் ஆய்வு துண்டுப்பிரசுரங்களை சமர்ப்பித்தல் மற்றும் சர்வதேச போட்டிகளுக்காக மாணவர்களை அனுப்புதல் ஆகிய தேர்வு முறைகளின் முன்னேற்றம், 8 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இடைப்பட்ட வீச்சில் குறைந்த பெறுமதியில் காணப்பட்டதுடன் அத்தேர்வு முறைகளின் கீழ் செயலாற்றுகை முன்னேற்றத்தை அதிகரிப்பது தொடர்பாக மேலும் கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது.

(ஆ) உலக தரப்படுத்தல்களின் கீழ் 2015 ஆண்டின் போது 2034 ஆம் இடத்தில் இருந்த கொழும்பு பல்கலைக்கழகம் 2016 அளவில் 2171 ஆம் இடம் வரை வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின்போது விஞ்ஞான பீடம் மற்றும் மருத்துவ பீடத்திற்காக சேர்க்கப்படக் கூடியாகவிருந்த அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2015 பேர்களாக இருந்த போதிலும், 1793 மாணவர்களே சேர்க்கப்பட்டிருந்தமையால் மாணவர்கள் 222 பேர் பல்கலைக்கழகத்திற்கு சேர்க்கப்படும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளன என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்காக கலைபீடத்திற்கு அனுமதி பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த 550 பேர் என குறிப்பிட்டிருந்த போதிலும் அம்மூன்று வருடங்களிலும் முறையெ 596 பேர், 739 பேர் மற்றும் 692 பேர் அனுமதிக்கப்பட்டிருந்தமையால் 3 வருடங்களிலும் அனுமதிக்கப்பட்ட மேலதிக மாணவர்கள் எண்ணிக்கை 377 பேர் ஆகும். பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை பல வருட காலத்திற்கு முன்னர் தீர்மானித்திருந்ததுடன் அந்த எண்ணிக்கை காலத்திற்கு பொருத்தமான விதத்தில் திருத்துவதற்காக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்காமை இதற்கு முக்கிய காரணமாக இருந்துள்ளது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2015, திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்ட பௌதீக புத்தக மெய்மையாய்தலின் பிரகாரம் ரூபா 3,292,524 தொகை பெறுமதியான 27,367 புத்தகங்கள் காணாமல் போயிருந்தது. மீளாய்வாண்டின் போது 3298 புத்தகங்களின் பெறுமதியாகிய ரூபா 499,628 தொகை கணக்குகளில் இருந்து பதிவழக்கப்பட்டதைத் தவிர அது தொடர்பாக வேறு நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்திற்கு வழங்கியிருந்த அரச மூலதன மானியங்களில் ரூபா 140,910,000 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியாக இருந்ததுடன் அதில் அடங்கியிருந்த ரூபா 107,590,000 தொகை கடந்த பல வருட காலமாக குறிப்பிட்ட குறிக்கோளுக்காக செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**4.3 தொழிற்படு செயற்பாடுகள்**

உரிய முறையால் எதிர்வுகூறக் கூடிய செலவு மதிப்பீடொன்று இன்றி முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது ரூபா 297,750 தொகைக்கான செலவுகளுக்காக 41 சந்தர்ப்பங்களில் ரூபா 761,350 இற்கான முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.

**4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிறுவனத்தினால் நடத்தப்படும் பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 2016, திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 29 நிதியக் கணக்குகள் தொடர்பான கூட்டுத்தொகை ரூபா 23,863,768 தொகை குறிப்பிட்ட விடயங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான இருப்பு மெய்மையாய்தல் அறிக்கையின் பிரகாரம் களஞ்சியத்தில் அசையாத இருப்பு மற்றும் மெதுவாக அசையும் இருப்பு முறையே ரூபா 165,518 தொகை மற்றும் ரூபா 259,760 தொகையாக இருந்தது.

(இ) நூலகத்தில் இருந்து புத்தகங்கள் மோசடியான முறையில் வெளியே கொண்டு செல்வதை தடுப்பதற்காக நூலக வாயிலில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பான மின்வலுப்படலை 2016, பெப்புருவரி 8 ஆந் திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2017, மே 09 ஆந் திகதி வரை ஒரு வருடத்தை மிகையான காலம் முதல் செயற்படாமல் காணப்பட்ட போதிலும் அதனை பழுதுபார்த்திருக்கவில்லை.

### 4.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கை முறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழக வளாகத்தில் நடத்தப்படும் புத்தசாலையை வாடகைக்கு கொடுக்கும் போது பெறுகைகள் நடைமுறையில் இருந்து விலகி வாடகையாளர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். புத்தக நிலையம் நடத்தப்படும் 685 சதுர அடி கட்டிடத்தின் பறுெமதியை மதிப்பீட்டு வாடகையின் மீது கவனத்தை எடுக்காமல் 2008, செத்தெம்பர் முதல் 2016, திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஒரே நிறுவனத்திற்கு வாடகைக்கு கொடுத்திருந்தமையால் ரூபா 966,668 இற்கான வருமானம் ஒன்றினை இழந்திருந்தது. மேலும் அவ்வளாகத்தில் அமைந்துள்ள வங்கி ஒன்றில் இருந்தும் மற்றும் இரண்டு பால் விற்பனை நிலையங்களில் இருந்தும் வாடகை ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016, மாச்சு 15 முதல் 2018, மாச்சு 14 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக பல்கலைக்கழகங்களில் பாதுகாப்பு சேவை வழங்கப்படுவது தொடர்பாக விலைகூறல் அழைப்பதற்காக தயாரித்திருந்த நியமக் குறியீடுகளில் பல்கலைக்கழகங்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் தொடர்பாக 3 வருட அனுபவத்தை பூர்த்தி செய்து இருக்க வேண்டுமென உட்படுத்தியிருந்த நிபந்தனையின் காரணமாக சமர்ப்பித்திருந்த விலைகூறல்களில் இருந்து 3 விலைகூறல்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதில் அடங்கியிருந்த இரண்டாவது குறைந்த கூறுவிலையாகிய ரூபா 41,288,400 இற்கான கூறுவிலை சமர்ப்பித்திருந்த விலைகூறல் நிராகரிக்கப்பட்டிருந்தமையால் ஐந்தாவது குறைந்த கூறுவிலையாகிய ரூபா 44,454,896 இற்கான விலைகூறல் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திற்கு பெறுகைகளை வழங்குவதற்கு நேரிட்டிரந்தது. அதன் பிரகாரம் ஒரு வருடத்திற்காக ரூபா 3,666,496 தொகை வீதம் 2016, மாச்சு முதல் 2018 மாச்சு மாதம் வரை ரூபா 7,332,992 இற்கான தொகையொன்று மிகையாகச் செலுத்த நேரிட்டிருந்தது.

(இ) பல்கலைக்கழகத்தில் 5 மாடிகளைக் கொண்ட சுஜாதா ஜயவர்தன மகளிர் விடுதியில் 50 மலசலகூடங்கள் மற்றும் 30 குளியல் அறைகள் நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 25,359,367 இற்கான (பெறுமதி கூட்டிய வரியுடன்) தொகைக்கு தனியார் கம்பனியொன்றுடன் 2013, திசெம்பர் 24 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வேலைகள் தாமதித்ததன் காரணமாக 2015, யூன் 16 ஆந் திகதி பல்கலைக்கழகத்தினால் குறிப்பிட்ட ஒப்பந்த உடன்படிக்கையை இரத்து செய்வதாக ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.4.8 இன் பிரகாரம் பெற்றிருந்த ரூபா 11,32,114 தொகை பெறுமதியான செயலாற்றுகை பிணை முறி, செல்லுபடியாகும் காலம் முடிவடைய முன்னர் பல்கலைக்கழகத்திற்கு அறவிடக் கூடியதாக இருந்த போதிலும் அதனை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

மேற்கூறிய ஒப்பந்த உடன்படிக்கையை இரத்து செய்த பின்னர் ரூபா 1,11,97,072 தொகைக்கான மீதியான வேலைகளை பூர்த்தி செய்வதற்காக பெறுகைகள் நடைமுறையை கடைப்பிடித்து ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்வதற்குப் பதிலாக, 2015 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர் 5 பேருக்கு 5 மாடிகளிலும் காணப்பட்ட மீதியாக காணப்பட்ட நிர்மாண வேலைகளை வெவ்வேறாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) சுஜாதா ஜயவர்தன விடுதியின் பழைய கட்டிடம், ஹவ்லொக் விடுதியின் பழைய கட்டிடங்கள், ப்லொட் போமேன் விடுதியின் முன்பக்க கட்டிடத்தின் தரைமாடி மற்றும் பின்பக்க மத்திய கட்டிடங்களை பழுதுபார்த்தல் தொடர்பாக முகாமையின் கவனம் உரிய முறையில் செலுத்தப்பட்டிருக்காமையால் இவ்விடுதி பாவனைக்கு பொருத்தமில்லாத நிலைமை ஒன்று காணப்பட்ட போதிலும் அவற்றில் மாணவர்கள் தங்கி இருந்ததாக அவதானிக்கப்பட்டது.

*4.6* **பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 325 வெற்றிடங்கள் காணப்பட்டன. கலாநிதி வெற்றிடங்கள் 111 காணப்பட்டமையால் வெளி விரிவுரையாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வெளி விரிவுரையாளர்கள் 379 பேர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 2,94,06,870 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) காலத்திற்கு ஏற்ப முக்கியமற்ற 05 தட்டச்சாளர் பதவிகள் மற்றும் 17 சுருக்கெழுத்தாளர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் அப்பதவிகளுக்கு பதிலாக காலத்திற்கு ஏற்ப முக்கியமான பதவிகளை உருவாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

*5.1* **பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் 20 செலவு விடயங்களை பாதீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவு இடையே 10 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

*6.* **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் எடுக்கப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | ஆதனங்களின் உரிமையை உறுதிப்படுத்தியிருக்காமை, சொத்துக்கள் பராமரித்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான பலவீனங்கள் காணப்படாமை. |
| (ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள் | மீதிகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) நிதியங்கள் பேணல் | நிதியங்கள் ஆக்கப்பட்ட குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தப் படாமை. |
| (ஈ) ஒப்பந்த நிருவாகம் | உரிய கோவைகள் முறைப்படி பேணப்படாமை மற்றும் மேற்பார்வை பலவீன மட்டத்தில் காணப்படல். |
| (உ) பதவியணியினர் நிருவாகம் | கல்விசார் பதவியணியினரின் உள்வருதல் பதிவு செய்யாமை. |
| (ஊ) நூலக நிருவாகம் | முறைசார் விதமாக நூலகப் புத்தகங்கள் மெய்மையாய்தல் மேற்கொள்ளப்படல் மற்றும் ஒப்பீட்டு ரீதியான பதிவேடுகள் முறைப்படி பேணப்படாமை. |
| (எ) செயற்படு நிருவாகம் | மாணவர்களுக்கு கல்வி விடயங்களை மேற்கொள்வதற்கு பொருத்தமான சுற்றாடல் ஒன்று காணப்படும் விதத்தில் விடுதிகள் நடாத்தப்படாமை. |

ஒப்பம் : எச். எம். காமினி விஜேசிங்ஹே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

2-416

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை**
**2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று உள்ளபடியான நிதிக்கூற்று**

| சொத்துக்கள் | 2016 ரூபா | | 2015 ரூபா | |
|---|---|---|---|---|
| **நிலையான சொத்து** | | | | |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 347,433,707 | | 359,721,525 | |
| புரிந்துகொள்ள முடியாத சொத்துக்கள் | 1,291,544 | | - | |
| முதலீடுகள் (நீண்ட காலம்) | - | | - | |
| முடிவுறாத, செயற்பாட்டுநிலை மூலதன வேலைகள் | 11,111,047 | | - | |
| | | 359,836,299 | | 359,721,525 |
| இழப்பு சொத்துக்கள் | | - | | - |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| பொருட்கள்/கையிருப்புக்கள் | 1,308,962 | | 1,402,827 | |
| வியாபார மற்றும் ஏனைய பெறுவனவுகள் | - | | - | |
| முதலீடுகள் (குறுகிய காலம்) | 12,131,278 | | 8,335,431 | |
| பணமும் பணம் சார்ந்தவையும் | 98,888,524 | | 61,510,157 | |
| | | 112,328,763 | | 71,248,415 |
| **மொத்த சொத்துக்கள்** | | **472,165,062** | | **430,969,941** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | 3,775,910 | | 7,688,029 | |
| அட்டுறு செலவுகள் | 11,842,194 | | 1,962,585 | |
| குத்தகை பொறுப்பு (குறுகிய காலம்) | 5,804,118 | 21,422,222 | 3,590,493 | 13,241,107 |
| **நிலையான பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்த வேண்டியவைகள் | - | | - | |
| குத்தகை பொறுப்பு (நீண்ட காலம்) | - | | - | |
| பணிக்கொடை - ஒதுக்கம் | 5,693,528 | | 5,031,838 | |
| வரையறுக்கப்பட்ட நிதி | - | | - | |
| அன்பளிப்பும் நன்கொடையும் | 231,570,152 | | 231,450,152 | |
| ஏனைய மானியங்கள் | 2,500,000 | | 2,500,000 | |
| | | 239,763,679 | | 238,981,989 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 261,185,901 | | 252,223,096 |
| **தேறிய சொத்துக்கள்** | | | | |
| திரண்ட நிதி (மூலதன மானியம்) | 263,050,113 | | 209,550,113 | |
| பிணைக் கடமைப்பாடும் ஏனையவையும் | - | | - | |
| பொது ஒதுக்கம் | (52,070,952) | | (30,803,268) | |
| மூலதன ஒதுக்கம் | - | | - | |
| **மொத்த தேறிய சொத்து** | | 210,979,161 | | 178,746,845 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **472,165,062** | | **430,969,941** |
| **(பயன்படுத்தப்பட்ட மொத்த நிதி)** | | | | |

*இந்த நிதி அறிக்கைககள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பொதுத்துறை கணக்கியல் தரங்கள் (SLPSAS) பல்கலைக்கழக சட்டம் 16,1978 இல் பகுதி 106(1) பகுதி 107(11) மற்றும் நிதிச்சட்டம் 38,1971 இல் பகுதி 13 (6)இற்கு அமைவாக தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டது.*

| | | |
|---|---|---|
| கலாநிதி சி. ஜெயசங்கர், | திரு. து. விஜெயகுமார் | திருமதி M. K. D. லக்மாலி |
| கணக்கியல் அதிகாரி | உதவி கணக்கியல் அதிகாரி | சிரேஸ்ட உதவி நிதியாளர் |
| பணிப்பாளர் | உதவி பதிவாளர் | |

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை**
**2016 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் செயற்பாட்டுக் கூற்று**

| **செயற்பாட்டு வரவுகள்/வருமானங்கள்** | மார்கழி 31<br>2016 | மார்கழி 31<br>2015 |
|---|---|---|
| நடைமுறை மானியங்கள் | 146,175,000 | 136,900,000 |
| தேறிய வரவு /(இழப்பு) ஏனைய செயற்பாடுகளிலிருந்து | - | - |
| ஏனைய வரவுகள் | 3,485,112 | 1,527,833 |
| | 149,660,112 | 138,427.833 |
| மாணவர்களுக்கான நிதி உதவி | - | - |
| | **149,660,112** | **138,427,833** |
| **செயற்பாட்டுச் செலவுகள்** | | |
| சம்பளங்களும் கூலிகளும் | 93,871,504 | 88,530,822 |
| பிரயாணச் செலவுகள் | 818,516 | 146,776 |
| வினியோக மற்றும் நுகர்வுச் செலவுகள் | 3,647,754 | 3,657,009 |
| பராமரிப்புச் செலவுகள் | 2,453,719 | 2,070,516 |
| ஒப்பந்த வேலைச் செலவுகள் | 30,165,217 | 24,412,581 |
| ஆய்வும் அபிவிருத்தியும் | - | - |
| பெறுமானத் தேய்வும் ஒதுக்கச் செலவுகளும் | 27,754,550 | 13,910,035 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 12,216,536 | 8,615,336 |
| மொத்த செயற்பாட்டுச் செலவுகள் | **170,927,796** | **141,343,075** |
| **செயற்பாட்டுச் செலவுகளினால் செலவிலும் கூடிய வருமானம் (வருமானத்திலும் கூடிய செவவீனம்)** | **(21,267,684)** | **(2,915,242)** |
| மாணவர்களுக்கான நிதி உதவி | - | - |
| **மொத்த செயற்பாடுகளிலிருந்து வரும் செலவிலும் கூடிய வருமானம் (வருமானத்திலும் கூடிய செலவீனம்)** | **(21,267,684)** | **(2,915,242)** |
| அசாதாரண செயற்பாடுகள் | - | - |
| (பதிவளித்தலும் ஏனைய சீராக்கமும்) | - | - |
| **பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்ட குறித்த காலப்பகுதிக்கான தேறிய காலத்திற்கான ஏற்ற இறக்கம்** | **(21,267,684)** | **(2,915,242)** |

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை**
**மறைமுக முறையிலான நிதிப்பாய்ச்சல் கூற்று**
**2016 திசெம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதிப்பாச்சல் கூற்று**

| | 2016 ரூபா | 2015 ரூபா |
|---|---|---|
| **நடைமுறைச் செயற்பாடுகள் மூலமான நிதிப்பாச்சல் கூற்று** | | |
| சாதாரண செயற்பாடுகள் மூலம் ஏற்றம்/இறக்கம் | (21,267,684) | (1,269,826) |
| **காசற்ற செயற்பாடுகள்** | | |
| பெறுமானத் தேய்வு | 27,754,550 | 13,910,035 |
| ஒதுக்கம் | 2,043,918 | 5,031,838 |
| கொடுப்பனவுகளுக்கான ஏற்றம் | 9,879,610 | 1,962,585 |
| ஏனைய நடைமுறைச் சொத்துகளுக்கான ஏற்றம் | (1,488,357) | 6,175,718 |
| முற்கால உருப்படிகள் | (3,912,119) | (248,352) |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதிக்கு மாற்றப்பட்டது | (1,382,228) | - |
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | 11,627,689 | 25,561,997 |
| **முதலீட்டு செயற்பாடுகளுக்கான நிதிப்பாய்சல்** | | |
| உபகரணக் கொள்வனவு | (14,916,217) | (66,190,827) |
| புரிந்துகொள்ள முடியாத சொத்துக்கள் | (1,722,059) | - |
| முடிவுறாத செயற்பாட்டு நிலை மூலதன வேலைகள் | (11,111,047) | - |
| முதலீடுகள் | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்சல்** | (27,749,323) | (66,190,827) |
| **நிதி செயற்பாட்டிற்கான நிதிப்பாய்ச்சல்** | | |
| மூலதன மாணியங்கள் | 53,500,000 | 50,000,000 |
| கட்டுப்படுத்தப்பட்ட நிதி | - | - |
| ஏனைய மாணியங்கள் | - | - |
| அன்பளிப்பும் நன்கொடையும் | - | - |
| மூலதன ஒதுக்கம் | - | - |
| பிணைக் கடமைப்பாட்டு ஒதுக்கம் | - | - |
| **நிதி செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தேறிய நிதிப்பாய்ச்சல்** | 53,500,000 | 50,000,000 |
| நிகர அதிகரிப்பு (குறைவு) பணம் மற்றும் அதற்கிணையானவை | 37,378,366 | 9,371,171 |
| ஆரம்பகால பணம், பணம்சார்ந்தவைக்கான ஆரம்ப மீதி | 61,510,157 | 52,138,987 |
| **முடிவடைந்த காலத்துக்கான பணம், பணம்சார்ந்தவைக்கான இறுதி மீதி** | 98,888,524 | 61,510,157 |

**சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக் கழகம், இலங்கை**
**2016ம் ஆண்டு திசெம்பர் 31ம் திகதி முடிவடைந்த வருடத்தில் தேறிய சொத்துக்களில் மாற்றங்களை ஏற்படுத்தியமைக்கான நிதிப்பாய்சல் கூற்று**

ரூபா

| | திரட்டிய நிதி | பிணைக் கடமைப்பாட்டு ஒதுக்கம் | பொது ஒதுக்கம் | ஏனைய ஒதுக்கம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ***2014 திசெம்பர் 31ல் மீதி*** | *151,708,800* | - | *(29,533,442)* | - | *122,175,357* |
| காலத்திற்கான ஏற்ற இறக்கம் | - | - | *4,015,938* | - | *4,015,938* |
| ஏனைய சீராக்கல்கள் | - | - | *(6,931,180)* | | *(6,931,180)* |
| ஏனைய ஒதுக்கத்தில் அதிகரிப்பு | - | - | *1,645,416* | - | *1,645,416* |
| மேலதிக பங்களிப்பு | *50,000,000* | - | - | - | *50,000,000* |
| ***2015, திசெம்பர் 31ல் மீதி*** | *201,708,800* | - | *(30,803,268)* | - | *170,905,532* |
| காலத்திற்கான ஏற்ற இறக்கம் | - | - | *(21,267,684)* | - | *(21,267,684)* |
| ஏனைய சீராக்கல்கள் | - | - | - | - | - |
| ஏனைய ஒதுக்கத்தில் அதிகரிப்பு | - | - | - | - | - |
| மேலதிக பங்களிப்பு | *53,500,000* | - | - | - | *53,500,000* |
| ***2016, திசெம்பர் 31ல் மீதி*** | *255,208,800* | - | *(52,070,952)* | - | *203,137,848* |

*02-221*

---

## *அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்*

### *பிரதேச அபிவிருத்தி வங்கி*

*2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆம் பிரிவினால் திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கடன்களை அறவிடுதல் விசேட ஏற்பாடுகளின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியின்பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*திசாநாயக முதியான்சேலாகே புத்திக திசாநாயக்க/களு ஆராச்சிகே திலக் சந்தன குமார*

*சேமிப்பு கணக்கு இலக்கம் : 731010102519*
*கடன் கணக்கு இலக்கம் : 731059600109*

*2017.11.28 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2017/ 13 ஆம் இலக்கக் கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.*

*"பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் கல்கமுவை சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான சந்தியா எல். எதிரிமுனி அவர்களினால் சாட்டுதல் செய்யப்பட்ட 2016.11.22 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 7214 உடைய ஈட்டுமுறியின்படி வங்கிக்கு வருமதியாக உள்ள பணம் செலுத்துதல் கடன்படுனர் எனக்குறிப்பிடப்படும், "ஹிரண்யா புத்தகசாலை" அநுராதபுரம் வீதி, அம்பன் பொல எனும் முகவரியில் வசிக்கும் திசாநாயக்க முதியான்சேலாகே புத்திக திசாநாயக்க மற்றும் இலக்கம் 13, அநுராதபுரம் வீதி, அம்பன்பொல எனும் முகவரியில் வசிக்கும் களுஆராச்சிகே திலக் சந்தன குமார ஆகியோரினால் கைவிடப்பட்டுள்ளதனால் அவ் ஈட்டுப்பத்திரத்தின்படி 2017.08.29 ஆந் திகதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள ரூபா நாற்பத்து ஆறு இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து அறுநூற்று முப்பது சதம் முப்பத்தேழு (ரூபா 46,38,630.37) கடன்தொகை மற்றும் அத்தினத்தில் வருமதியாக உள்ள வட்டி ரூபா தொண் ணூற்று ஆறாயிரத்து தொளாயிரத்து பன்னிரெண்டு சதம் பதினான்கு (ரூபா 96,912.14), அத்திகதியில் பெறவேண்டிய கட்டணங்கள் ரூபா இருபத்து மூவாயிரம் (ரூபா 23,000.00) மற்றும் 2017.08.29 ஆந் திகதி முதல் ஏலவிற்பனை திகதி வரை 18 % வருடாந்த வட்டிவீதத்தில் பெறவேண்டிய*

முழு வட்டி, வரி, விளம்பரச் செலவு உட்பட ஏலவிற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியாக செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளிகளினால் 7214 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட வேண்டும். ஆதனத்தின் விபரங்கள் கீழே உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளன.".

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம் கண்டி, டொரிங்டன் வீதி, இலக்கம் 24 எனும் முகவரியில் வசிக்கும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்துக்கு வழங்கப் பட்டுள்ளது.

**அடகு வைக்கப்பட்டுள்ள ஆதனங்களின் விபரங்கள்**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், வன்னி ஹத்பற்று, கந்திஹேன கோரளை, மஹவ பிரதேச சபை எல்லைக்குள், அம்பன்பொல பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 191 உடங்காவ கிராம அலுவலர் பிரிவில் கிவுலேகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள அ. க. பி. 3178 எனும் வரைபடத்தில் துண்டு இலக்கம் 02 உடைய பூஜ்ஜியம் புள்ளி இரண்டு பூஜ்ஜியம் பூஜ்ஜியம் பூஜ்ஜியம் ஹெக்டயர் (ஹெ. 0.2000) விலாசலமான அரசாங்க காணியில் அளந்து வேறாக்கப்பட்ட 2016.04.28 ஆந் திகதிய குருநாகல் நில அளவையாளர் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அ. க. பி. 3178 இல் மேலதிக இலக்கம் 06 இல் பத்திர இலக்கம் 06 இல் துண்டு இலக்கம் 105 ஐக் கொண்ட பூஜ்ஜியம் புள்ளி ஒன்று பூஜ்ஜியம் பூஜ்ஜியம் பூஜ்ஜியம் ஹெக்டயர் (ஹெ. 0.1000) விசாலமான காணிக்கு வரைபடத்தின்படி எல்லைகளாவன - வடக்கு: அ. க. பி. 3178 இல் மேலதிக எண் 06 பத்திர இலக்கம் 06 இல் துண்டு இலக்கம் 104 ; கிழக்கு : குருநாகலை - அநுராதபுரம் பிரதான வீதி ; தெற்கு : அ. க. பி. 3178 இல் துண்டு இலக்கம் 107 ; மேற்கு : இவ்வரைபடத்தின் துண்டு இலக்கம் 106 ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணி மற்றும் அதன் மீது அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பழவகைகள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபை செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
இல. 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

2- 344

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2017, திசெம்பர் 19 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:

''(கடன்பெறுநரான) உனவட்டுனவில் ''சாமய பீச் ஹொட்டேல்'' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின் கீழும் தனியுரிமையாளராகத் தொழில் கொண்டு நடாத்து கின்ற உனவட்டுனவைச் சேர்ந்த கங்கட கன்காணம்கே ஷாந்த குமார குணரத்ன என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) காலியைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பிமாலி சூரியாராச்சி என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.11.23 ஆந் திகதிய 1383 ஆம் இலக்க முறிமூலமும், 2016.06.16 ஆந் திகதிய 1476 ஆம் இலக்க முறிமூலமும் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையிலும் மேலும் விபரமாக விவரிக்கப்பட்டதுமான ஆதனத்தினதும் வளவு களினதும் பிணைப்பொறுப்புக் கெதிராக வழங்கப்பட்ட கடன்களின்மீது/ வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாரா தலாலும்.

அத்துடன் 2017 நவெம்பர் 30 ஆந் தேதியன்றுள்ளவாறாக ஒரு கோடியே ஆறு இலட்சத்து அறுபத்தொறாயிரத்து எண்ணூற்றி நாற்பத்திநான்கு ரூபா முப்பத்திமூன்று சதம் (ரூ. 1,06,61,844.33) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள்மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்க ளின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட கடன்களுக்கான/ நிதிவசதிகளுக்கான பிணைப்பொறுப்பாகச் சொல்லப்பட்ட முறிகளினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப் பட்ட ஆதனமும் வளவுகளும், அவ்வாதனத்துக்கும் வளவு களுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை உரித்து மற்றும் அக்கறையுட்பட, ஒரு கோடியே ஆறு இலட்சத்து அறுபத்தொறாயிரத்து எண்ணூற்றி நாற்பத்திநான்கு ரூபா முப்பத்திமூன்று சதம் (ரூ. 1,06,61,844.33) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், சொல்லப்பட்ட 1476 ஆம் இலக்க முறிமீது வருமதியாகவுள்ள ஐம்பத்தி ஏழு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து அறுநூ ற்றியறுபத்தொன்பது ரூபா (ரூ. 57,41,669.00) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று தசம் பூச்சியம்

ஒன்று சதவீத (13.01%) வட்டியையும் சொல்லப்பட்ட 1383 ஆம் இலக்க முறிமீது வருமதியாகவுள்ள முப்பத்தெட்டு இலட்சத்து முப்பத்தி மூன்றாயிரத்து முந்நூற்றிமுப்பத்தெட்டு ரூபா (ரூபா 38,33,338.00) கொண்ட பிரதான தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினான்கு தசம் இரண்டு ஐந்து சதவீத (15.25%) வட்டியையும், எல்லாம் 2017, திசெம்பர் 1 ஆந் நாளிலிருந்து விற்பனைத் திகதிவரை, அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, முதன்மைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது;"

### மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்து, ஹபராதுவ பிரதேச சபை எல்லைகளினுள், ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவு, 137V கிராம அலுவலர் பிரிவு - யத்தஹிமுல்லவினுள் உனவட்டுன, யத்தஹிமுல்லவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள மண், மரங்கள், நிரந்தரமான கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் குடாமலகேவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் காணித்துண்டம் 1 இன் காணித்துண்டம் 1 A வின் மீள் நிலஅளவையாகவுள்ளதும் உரிமம்பெற்ற நில அளவையாளர் எஸ். டபிள்யூ. பீரிஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்டதும் 2012.09.08 ஆந் திகதியன்று நிலஅளவையிடப்பட்டதும் 4938 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : மலகேவத்த; கிழக்கில்: உஸ்மத்துமகேவத்த ; தெற்கில் : வெல்லே தேவால வீதி மற்றும் ; மேற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 1 B; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள் பதினான்கு தசம் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.14.6பே.) கொண்டுள்ளது.

**மேலே விவரிக்கப்பட்ட காணித்துண்டம் 1A பின்வரும் காணியின் மீள் நிலஅளவையாகவுள்ளது:**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்து, ஹபராதுவ பிரதேச சபை எல்லைகளினுள், ஹபராதுவ பிரதேச செயலகப் பிரிவு, 137V கிராம அலுவலர் பிரிவு - யத்தஹிமுல்லவினுள் உனவட்டுன, யத்தஹிமுல்லவில் அமைந்துள்ளதும் அதன் மீதுள்ள மண், மரங்கள், நிரந்தரமான கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் குடாமலகேவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் எச். விசுப் பெரும என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1977.07.03 ஆந் தேதிய 1005 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 1A எனவடையாளமிடப்பட்டதும் மேற்கூறப் பட்ட உரிமமம்பெற்ற நிலஅளவையாளர் எச். விசும்பெரும என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1977.07.03 ஆந் தேதிய 1005 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட காணித்துண்டம் 1 இனதாய் அதே நிலஅளவையாளரினால் 1985.01.06 ஆந் தேதியன்று உட்பிரிவிடுகையிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில்: மலகேவத்த; கிழக்கில்: உஸ்மத்துமகேவத்த ; தெற்கில் : யத்தஹிமுல்லவிலிருந்து மாத்தறைக்குச் செல்லும் வீதி மற்றும் ; மேற்கில் : அதே காணியின் காணித்துண்டம் 1 B; பரப்பளவில் இது, இவ்வெல்லைகளினுள் பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) கொண்டுள்ளதுடன், காலிக் காணிப்பதிவகத்தில் தொகுதி/ பக்கம் எஸ் 34/55 இல் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

சாதனத்துடன் மின்சார வழங்கல் முறைமை, நீர்வழங்கல் முறைமைச் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனங்கள் மற்றும் காற்றுச் சீராக்கல் சாதனங்கள் என்பனவுட்பட மேலே மேலும் விபரமாகக் குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்டுள்ள அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்பட்டுள்ள அல்லது இதன்பின்னர் காலத்துக்குக்காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி சாதனங்கள், இணைப்புக்கள் பொருத்திகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் அவை தனித்தனி யாகவும்.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

2-415

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.